# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035

தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் - 16.06.2025**

**முன்னிலை**

## திரு முகம்மது ஷகீல் அ்ஃதர், இகாப (ஓய்வு)
## மாநில தலைமை தகவல் ஆணையர்

*****

**வழக்கு எண். SA 6392/SCIC/2023**

திரு.T.செந்தில்ராஜா த/பெ.திருப்பதி
கதவு எண்.36, ஆரித்தெரு புதுப்பேட்டை ரோடு ..... மேல்முறையீட்டாளர்
திருப்பத்தூர் தாலுகா
திருப்பத்தூர் - 635 601

//எதிர்//

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர் ....... பொதுஅதிகார அமைப்பு
வட்டாட்சியர் அலுவலகம்
பர்கூர் வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம்.

**ஆணை**

| | | |
|---|---|---|
| 1. | மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு | 30.01.2023 |
| 2. | மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு மனு | 03.03.2023 |
| 3. | இரண்டாம் மேல்முறையீட்டு மனு | 06.04.2023 |
| 4. | ஆணையத்தின் அறிவிப்பு | 31.05.2023 |
| 5. | பின்னர் பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 19.12.2024 |
| 6. | மனுதாரரின் ஆட்சேபணை மனு | 18.01.2025 |

1. மனுதாரர், பொதுத் தகவல் அலுவலர் / பர்கூர் வட்டாட்சியர் அலுவலகம், கிருஷ்ணகிரி மாவட்டம் அவர்களுக்கு அனுப்பிய மனுவில், கீழ்க்கண்டவாறு கோரியுள்ளார், “நான் 30/12/2022 - தேதியில் பர்கூர் வட்டாட்சியர் அவர்களிடம் ஒப்புதல் அட்டையுடன் கூடிய விரைவு அஞ்சல் வாயிலாக (Speed Post with Acknowledgement-ET554756573IN) மனு அனுப்பியிருந்தேன். அந்த மனுவின் நகல் சான்று செய்து வழங்கவும் - என்னுடைய மனு தொடர்பான மனுக்கள் பதிவேட்டின் நகல் தேவை” என்பன போன்று 8 (எட்டு) இனங்களில் தகவல்களை வழங்கக் கோரியுள்ளார்.

2. **இன்றைய (10/06/2025) விசாரணைக்கு மனுதாரர் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பில் திரு.மா.அ.இ.அல்லா பகஷ் பாஷா, தலைமையிடத்து துணை வட்டாட்சியர், பர்கூர் வட்டாட்சியர் அலுவலகம் அவர்கள் ஆஜரானார். ஆணையத்தின் முன உள்ள ஆவணங்களைப் பரிசீலனை செய்கையில் மனுதாரரின் 30/01/2023 தேதியிட்ட பிரிவு 6(1)-ன் கீழான மனுவிற்கு அப்போதைய (30/01/2023 தேதிய) பொதுத் தகவல் அலுவலர்/ தலைமையிடத்து துணை வட்டாட்சியர் திரு.மா.அ.இ.அல்லா பகஷ் பாஷா அவர்கள் மனுதாரருக்கு எவ்வித தகவலும் வழங்கவில்லை எனத் தெரிய வருகிறது. அதேபோன்று மனுதாரரின் பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவிற்கு அப்போதைய (03/03/2023 தேதிய) மேல்முறையீட்டு அலுவலர் / வட்டாட்சியர் திரு. P.சின்னசாமி அவர்கள் மனுதாரருக்கு எவ்வித தகவலும் வழங்கவில்லை எனத் தெரிய வருகிறது. எனவே, மேற்குறிப்பிட்ட திரு.மா.அ.இ.அல்லா பகஷ் பாஷா மற்றும் திரு.P.சின்னசாமி ஆகியோர் மீது பிரிவு 20(1) மற்றும் பிரிவு 20(2)-ன் கீழ் ஏன் நடவடிக்கை எடுக்கக் கூடாது என்பதற்கான காரண விளக்கத்தை இவ்வாணை கிடைக்கப் பெற்ற 15 தினங்களுக்குள் தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் மூலமாக ஆணையத்திற்கு அனுப்பி வைக்க வேண்டுமென்று ஆணையம் உத்தரவு பிறப்பிக்கின்றது. பொதுத் தகவல் அலுவலர், மேற்குறிப்பிட்ட இரண்டு காரண விளக்கங்களையும் பெற்று அதனை ஆணையத்திற்கு அனுப்பி வைக்க வேண்டுமென்று பணிக்கப்படுகிறார்.**

3. **இன்றைய விசாரணையின் போது, பொதுத் தகவல் அலுவலர் 19/12/2024 தேதியிட்டு இனம்வாரியான தகவல்களை மனுதாரருக்கு அனுப்பியுள்ளதாகத் தெரிவித்தார். மனுதாரர், தனது ஆட்சேபணை மனுவினை 18/01/2025 தேதியிட்டு ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார். மனுதாரர் தெரிவிக்கையில், 19/12/2024 தேதியிட்டு பொதுத் தகவல் அலுவலரால் தனக்கு அனுப்பியுள்ள தகவலில் இனம்-1-ஆ-க்கு வழங்கிய தகவலில் 23/06/2023 அன்று நிலம் அளவீடு செய்யப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் ஆனால் அவ்வாறான அளவீடு எதுவும் நடைபெறவில்லை என்றார். அதற்கு, பொதுத் தகவல் அலுவலர் நில அளவையரின் அறிக்கை மற்றும் இதர ஆவணங்களின் நகல்களையும் ஆணையத்தின் முன் சமர்ப்பித்து, 23/06/2023 அன்று நில அளவீடு செய்யப்பட்டதாகவும், அப்போது பக்கத்து நிலத்தின் உரிமையாளர் ஆட்சேபணை தெரிவித்ததோடு, O.S.No.110/2023 வாயிலாக மனுதாரர், தனக்கு சாதகமான தீர்ப்பினைப் பெற்றுள்ளதாகவும், மேற்குறிப்பிட்ட O.S.No.110/2023-ன் மீது தான் I.A. மேல்முறையீடு செய்திருப்பதாகவும், அந்த I.A. 17/06/2025 அன்று நீதிமன்றத்தில் விசாரணைக்கு வர இருப்பதாகவும், எனவே, மேற்குறிப்பிட்ட மேல்முறையீட்டின் தீர்ப்பு வரும் வரையில் நில அளவீடு செய்யக் கூடாது எனத் தெரிவித்ததாக நில அளவையர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாக ஆணையத்திடம் கூறினார். பொதுத் தகவல் அலுவலர், நில அளவையரின் அறிக்கை, அது தொடர்பான e-Court விவரங்களின் நகல்களையும் ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். எனவே, பொதுத்**

தகவல் அலுவலர், 17/06/2025 நீதிமன்றத்தில் அளிக்கப்படும் தீர்ப்பு, மனுதாரரான திரு.செந்தில்ராஜாவுக்கு சாதகமான முறையில் இருப்பின், சட்டத்தின் படி நிலத்தை அளவீடு செய்து, அதன் அறிக்கையினை மனுதாரருக்கு 30/06/2025-க்குள் ஒப்புகை அட்டையுடன் பதிவஞ்சலில் அனுப்பி வைப்பதோடு, அதன் மீதான அறிக்கையினை 15 நாட்களுக்குள் ஆணையத்திற்கு அனுப்பி வைக்க வேண்டுமென்று ஆணையம் உத்தரவு பிறப்பிக்கின்றது.

4. மேற்குறிப்பிட்ட 17/06/2025 தேதியிட்ட மேல்முறையீட்டில் மனுதாரருக்கு சாதகமாக தீர்ப்பு கிடைக்கவில்லையெனில், எதுவும் செய்ய இயலாது. மேற்குறிப்பிட்ட இரண்டு நடவடிக்கைகளுக்கும், பொதுத் தகவல் அலுவலர், ஒரு மாத காலத்திற்குள் அறிக்கையினை ஆணையத்திற்கு அனுப்பி வைக்க வேண்டுமென்று உத்தரவிடுகிறது. தற்போதைய பொதுத் தகவல் அலுவலர், முன்னாள் பொதுத் தகவல் அலுவலர் (30/01/2023 தேதிய) மற்றும் முன்னாள் மேல்முறையீட்டு அலுவலர் (03/03/2023 தேதிய) ஆகியோரிடமிருந்து இவ்வாணை கிடைக்கப் பெற்ற 15 தினங்களுக்குள் காரண விளக்கங்களைப் பெற்று, அதனை ஆணையத்திற்கு அனுப்பி வைக்க வேண்டுமென்று, ஆணையம் உத்தரவு பிறப்பிக்கின்றது. எனவே, இத்துடன் இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான வழக்கின் விசாரணை முற்றாக்கம் செய்யப்படுகிறது.

ஒம்./-(முகம்மது ஷகீல் அ்ஃதர்)
மாநில தலைமை தகவல் ஆணையர்

//ஆணைப்படி//

உதவி பதிவாளர்

**<u>வழக்கு எண். SA 6392/SCIC/2023</u>**

**பெறுநர்**

**பொதுஅதிகார அமைப்பு**

1.பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்
வட்டாட்சியர் அலுவலகம்
பர்கூர் வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம்.

2.திரு.P.சின்னசாமி,
முன்னாள் மேல்முறையீட்டு அலுவலர்
வட்டாட்சியர், பர்கூர் வட்டாட்சியர் அலுவலகம்

3.திரு.M.A.I.அல்லா பகஷ் பாஷா
முன்னாள் பொதுத் தகவல் அலுவலர்
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்
பர்கூர் வட்டாட்சியர் அலுவலகம்.

**மேல்முறையீட்டாளர்**

திரு.T.செந்தில்ராஜா த/பெ.திருப்பதி
கதவு எண்.36, ஆரித்தெரு புதுப்பேட்டை ரோடு
திருப்பத்தூர் தாலுகா
திருப்பத்தூர் - 635 601

நகல்.
1.மாவட்ட ஆட்சித் தலைவர்.
மாவட்ட ஆட்சித் அலுவலகம்
கிருஷ்ணகிரி மாவட்டம்.

2. பதிவாளர்
தமிழ்நாடு தகவல் ஆணையம்
நந்தனம், சென்னை-35 (for follow up)

RG/PC